கலைஞர் 100 1924 - 2023

செ.வெ.எண்: 730 நாள்: 15.12.2023

# திருநெல்வேலி மாவட்டம்

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் துறையில் காலியாகவுள்ள 583 கால்நடை ஆய்வாளர் நிலை -2 பயிற்சிக்கு தகுதியான நபர்களை ஆட்தேர்வு செய்யப்படவுள்ளது. இதில் தேர்வு செய்யப்பட்ட நபர்களை பயிற்சிக்கு பின்னர் கால்நடை ஆய்வாளர் நிலை -2 ஆக பணியமர்த்தப்படவுள்ளனர். முன்னாள் படைவீரர்களுக்கு 5% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு 31 பணியிடத்திற்கு முன்னாள் படைவீரர்களைக் கொண்டு நிரப்பப்படவுள்ளது. இப்பணியிடத்திற்கு +2 தேர்ச்சி பெற்று 55 வயதிற்குட்பட்ட விருப்பமுள்ள முன்னாள் படைவீரர்கள் உதவி இயக்குநர் முன்னாள் படைவீரர் நல அலுவலகம் திருநெல்வேலி அவர்களிடமிருந்து விண்ணப்ப படிவம் பெற்று படிவத்தினை பூர்த்தி செய்து ahdlisvls@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவும், மேலும் இயக்குநர், இயக்குநர் அலுவலகம், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள், கால்நடை பன்முக மருத்துவமனை வளாகம், 571 அண்ணா சாலை, நந்தனம், சென்னை-35.என்ற முகவரிக்கு தபால் மூலமாகவும் அனுப்பிவைத்து, அவ்விண்ணப்பத்தின் மற்றொரு பிரதியுடன் +2 மதிப்பெண் பட்டியல் நகல் மற்றும் முன்னாள் படைவீரர் அடையாள அட்டை நகல் ஆகியவற்றினை இணைத்து திருநெல்வேலி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் **30.12.2023**-க்குள் சமர்ப்பிக்குமாறு திருநெல்வேலி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் திரு.சி.இராமகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்துள்ளார் .

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**